O.S.39/2020
PW1 – பாக்கியநாதன்
நாள் 06.02.2026, 02.40 P.M.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதி எனது மனைவி என்றால் சரிதான். எனது மனைவி நல்ல உடல் நிலையில்தான் உள்ளார் என்றால் சரிதான். ஆனால் எனது மனைவிக்கு கொஞ்சம் காது கேட்காது. எனது மனைவி பெயரில்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. எனது மனைவிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கு விவரம் எனது மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு விவரத்தை வழக்கறிஞரிடம் நான்தான் கூறினேன் என்றால் சரிதான். எத்தனை இலக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 இலக்க சொத்திற்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் இலக்க சொத்திற்கு பட்டா எண் சர்வே எண் தெரியுமா என்றால் 309/1B3 ஆகும். 2 இலக்க சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் சர்வே எண் 309/1B2 ஆகும்.

வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்ட என்றால் அருணாச்சதேவர், மக்கள் பூச்சி, நாகலிங்கம், குமராண்டி ஆகியோருக்கு சொந்தமானது. நாகலிங்க தேவருக்கு வழக்கு சொத்து தந்தை வழி பாத்தியமானது. நாகலிங்க தேவருக்கு இரண்டு மனைவிகள் முதல் மனைவி பெயர் அரியம்மாள். இரண்டாவது மனைவி பெயர் யார் குமராயி. முதல் மனைவியின் வாரிசுதான் இந்த வழக்கின் பிரதிவாதி என்றால் சரியல்ல. முதல் மனைவி வாரிசுகள் யார் என்றால் பாண்டியம்மாள் என்பவர் மட்டும்தான். இரண்டாவது மனைவியின் வாரிசுகள் யார் என்றால் கருப்பையா, ஜானகி ஆகிய இரண்டு நபர்கள்தான். தாவா சொத்து நஞ்சை சொத்தா, புஞ்சை சொத்தை என்றால் புஞ்சை நிலங்கள். தாவா சொத்துக்கள் நான் அனுபவம் செய்வதற்கு ஆவணம் எதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

தாவா சொத்துக்களில் எனக்கு எந்தவித அனுபவமும், பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி பாத்தியத்தில்தான் இன்றுவரை தாவா சொத்து அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதியின் ஆக்கிரமிப்பில் உள்ளது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்குகிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.06 22:37:53 +0530